297—

துணை மின் நிலையம்

***7350—திரு. தா. மலரவன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், சாய்பாபா காலனி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது கோயம்புத்தூர், சாய்பாபா காலனிக்கு 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கவுண்டம்பாளையத்தில் 110/22-11 கி.வோ. துணை மின் நிலையம் இருப்பதால், சாய்பாபா காலனிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அப்பகுதியில் தற்போதைக்கு துணை மின் நிலையம் அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.*

திரு. தா. மலரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய தெய்வம், நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நாங்கள் தினந்தோறும் உச்சரிக்கும் சுப்ரபாதம், கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் இறைவன் உணவளிப்பதுபோல், கழகத்தில் இருக்கும் ஒன்றரைக் கோடி தொண்டர்களையும் கண்ணை இமை காப்பதுபோல கட்டிக் காத்து, வளர்த்துவரக்கூடிய கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர், வருங்கால இந்தியாவை வசீகரிக்கப்போகும் எங்களுடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, எனது கேள்வியைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2013 ஏப்ரல் 23]

கோயம்புத்தூர், சாய்பாபா காலனி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு அவசியம் எழவில்லை என்று சொன்னார்கள். நான் மேயராக இருக்கும்போதுதான் அதற்காக மாநகராட்சியினுடைய இரண்டரை ஏக்கர் இடத்தை அளித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே தொழில் வளர்ச்சி அதிகமாக உள்ளது. வளர்ந்துவரக்கூடிய அப்பகுதியில் துணை மின் நிலையம் மிக அவசியம் என்று கூறுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு, கோயம்புத்தூர், சாய்பாபா காலனி பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, சாய்பாபா காலனிக்கு 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கவுண்டம்பாளையத்தில் 110/22-11 கி.வோ. துணை மின் நிலையம், 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோயம்புத்தூரில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம், 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையம் ஆகிய இம்மூன்று துணை மின் நிலையங்களிலிருந்தும் அப்பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மூன்று துணை மின் நிலையங்களும், அதாவது, கவுண்டம்பாளையத்தில் உள்ள 110/22-11 கி.வோ. துணை மின் நிலையம் 16 எம்.வி.ஏ., திறன்கொண்ட இரண்டு மின் மாற்றிகளுடனும், 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற கோயம்புத்தூரில் உள்ள துணை மின் நிலையம் 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட 5 மின்மாற்றிகளுடனும், சீரனாயக்கன் பாளையத்தில் உள்ள 110/11 துணை மின் நிலையம் 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட 4 மின்மாற்றிகளுடனும் இயங்கி வருகின்றன. சாய்பாபா காலனி பகுதிக்கு இம்மூன்று துணை மின் நிலையங்களிலிருந்தும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மொத்தமாக 176 எம்.வி.ஏ. மின்பளு திறன்கொண்ட மின் மாற்றிகளுடன் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற சாய்பாபா

காலனிக்கு ஒட்டுமொத்தமாக 6 எம்.வி.ஏ., திறன்கொண்ட மின்பளுதான் தற்போது தேவையிருக்கிறது. ஆனால், 138.5 எம்.வி.ஏ. திறன்கொண்ட அளவிலே ஒட்டுமொத்த மின்பளு இருக்கிறது. எனினும், 37.5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்பளு அளவிற்கு அங்கே கூடுதலாக வசதி செய்யப்பட்டிருக்கிறது. தற்பொழுது புதிதாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லையென நான் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பிற்காலத்திலே, அந்தப் பகுதியினுடைய மின் தேவை அதிகரித்தால், அந்தச் சூழ்நிலைகளை ஆய்வு செய்து, தேவைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதியிலே கூடுதலாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாய்பாபா காலனி, தொழில்கள் அதிகமாக உள்ள, வளர்ந்து வரக்கூடிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், இனிவருங்காலத்தில், அங்குள்ள தேவையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். இப்போதைக்கு அந்த இடத்திலே தேவைக்குமேல் அதிகமாக மின்வசதி செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால், துணை மின் நிலையம் தேவையில்லை. ஒரு வேளை பிற்காலத்திலே, அந்தப் பகுதியினுடைய மின்பளு அதிகரிக்குமானால், அதைப் பற்றி ஆய்வு செய்து, தேவை ஏற்பட்டால், அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 298, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

298—

உயர்மட்டப் பாலம்

*__1662__—**திருமதி ர. சுபா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, 95 பேளூர் ஊராட்சியில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன். கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னகரட்டூர் கிராமத்திற்கு அருகிலுள்ள கல்லாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டிய இடம், கூடமலையிலிருந்து நனங்கரை செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலையில் 3.2-வது கிலோ மீட்டரில் உள்ளது. 95, பேளூர் ஊராட்சியிலுள்ள சின்னகரட்டூர், பெரியகரட்டூர், நரிப்பாடி, நனங்கரை, என்.நல்லமாதி, காட்டுக்கொட்டகை ஆகிய ஆறு குக்கிராமங்களில் வாழும் சுமார் 2,400 மக்கள், மழைக் காலங்களில் கல்லாற்றில் வெள்ளம் வருகின்றபோது, தங்கள் குடியிருப்புகளுக்கு வரவேண்டுமெனில், அருகிலுள்ள செந்தாரப்பட்டி பேரூராட்சி வழியாக சுமார் 11 கிலோ மீட்டர் சுற்றி, மாற்றுப் பாதையில் வரவேண்டியுள்ளது. சின்னகரட்டூர் அருகிலுள்ள கல்லாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கு ரூ.130 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் உயர்மட்டப் பாலம் அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*